www.penakural.com

மலர்: 02 இதழ்: 04 பிப்ரவரி 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்



பெண்களுக்கு இலவச பேருந்து வழங்கப்படுவது போல ஆண்களுக்கும் இலவச பேருந்து பயணத்திற்கு அனுமதிக்க வேண்டும்:

அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்!

## கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை மண்டல போக்குவரத்து மையமாக மாற்ற வேண்டும்!

முதலமைச்சருக்கு பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் கடிதம்

# மாவீரன் ஜெ.குரு அவர்களின் 63-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா



பாட்டாளி மக்கள் கட்சி சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 195 வது வட்டம் மேட்டுக்குப்பத்தில் மறைந்த வன்னியர் சங்கத் தலைவர் மாவீரன் ஜெ.குரு அவர்களின் 63-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் அவருடைய திருஉருவ படத்திற்கு சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர் துரை.சந்துரு, வட்ட செயலாளர் ந.மதிவாணன், மாநில தேர்தல் பணிக்குழு தலைவர் – வழக்கறிஞர் தி.சரவணன், மா.சந்திரசேகரன் (மா.ச.மு.சங்கம்), பகுதி துணை தலைவர்கள் இரா.குரு சுரேஷ், சு.திருநாவுக்கரசு, ஐ. சுரேஷ் (மெக்கானிக்), வ.அ.செ. புலி சந்திரசேகரன், வ.அ.த. க.பால்சங்கர், 196வது வட்ட செயலாளர் M.P.சீனு, இளைஞர் அணி செயலாளர் வீ.அய்யனார், 195வது வ.தே.ப.கு.செ பா.மணிகண்டன், மாநில, மாவட்ட, ஒன்றிய, வட்ட, கிளை நிர்வாகிகளும், இளைஞர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட பிற அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகளும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். 195 வது வட்டத்தின் சார்பாக ஏராளமான பொதுமக்களுக்கு அறுசுவை அசைவ உணவான பிரியாணி வழங்கப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவரும் மாவீரன் குரு அவர்களின் நினைவுகளை பகிர்ந்துகொண்டு நெஞ்சம் நிறைவுடன் விடைபெற்று சென்றனர்.

– சரவணன் @ மணிகண்டன்

தலையங்கம்

ஆசிரியர் குரல்

# அடையாளம் காணப்பட்டு கௌரவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி!

இந்த ஆண்டு பத்ம விபூஷண் விருது ஐவருக்கும், பத்ம பூஷண் விருது 17 பேருக்கும், பத்மஸ்ரீ விருது 110 பேருக்கும் என மொத்தம் 132 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் 34 பேர் எந்தவொரு புகழ் வெளிச்சமும் இன்றி சமூகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த 70 வயதான பார்பதி பருவா எனும் பெண்மணி, கௌரிபூர் ராஜாக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர். செல்வாக்கான குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் யானைகளின் பராமரிப்புக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். 'யானைகளின் ராணி' எனப்படும் இவர்தான் யானை பராமரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள முதல் பெண் ஆவார். யானைகள் - மனிதர்களின் மோதலுக்கு தீர்வு கண்டவர். இவரது அறிவியல்பூர்வமான உத்திகள், தொல்லை தரும் காட்டு யானைகளைப் பிடிப்பதற்கு அரசுக்கு உதவுகின்றன.

வேலூரை சொந்த ஊராகக் கொண்ட டாக்டர் பிரேமா தன்ராஜ். 72 வயதாகும் இவர் சிறுவயதில் தீவிபத்தில் 50 சதவீத தீக்காயம் அடைந்தவர். அதன்பிறகு நன்றாகப் படித்து நாட்டின் சிறந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவராக உயர்ந்தவர். தற்போது பெங்களூரில் வசித்துவரும் இவர், தீவிபத்தில் காயமடைந்தவர்களின் மறுவாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

பிகாரைச் சேர்ந்தவர் சாந்தி தேவி. ஒரு காலத்தில் தனது ஊரில் பொது இடத்திலிருந்து குடிநீர் அருந்தவே அனுமதி மறுக்கப்பட்ட இவர், தனது ஓவியக் கலைத் திறமையால் முன்னேறியவர். தில்லியில் ஜி20 உச்சி மாநாட்டின்போது பாரத் மண்டபத்தில் நடைபெற்ற கலை,கைவினைப்பொருள்கள் அரங்கத்தில் மதுபாணி வகை ஓவியத்தால் சந்திரயான்-3 கருப்பொருளைச் சித்திரித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர்.

கர்நாடகத்தின் மைசூரைச் சேர்ந்தவர் சோமண்ணா. தேன் சேகரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஜெனு குருபா பழங்குடியின மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக கடந்த 40 ஆண்டு காலமாகப் பணியாற்றி வருபவர். சத்தீஸ்கரைச் சேர்ந்தவர் ஜெகேஸ்வர் யாதவ். பிர்கோர், கோர்வா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியின மக்களிடையே எழுத்தறிவின்மையைப் போக்க தீவிரமாகப் பணியாற்றி வருபவர். தமிழகத்தின் கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகேயுள்ள தாசம்பாளையத்தைச் சேர்ந்தவர் பத்ரப்பன். 87 வயதாகும் இவர் 'வள்ளி கும்மி' எனப்படும் கலையின் ஆசிரியர். ஆண்கள் மட்டுமே பங்கேற்று வந்த வள்ளி கும்மி ஆட்டத்தில், பெண்களுக்கும் பயிற்சியளித்தவர் பத்ரப்பன். பாரம்பரிய கலைகளுக்கு எல்லாம் முன்னோடியாக வள்ளி கும்மி கலை கருதப்படுகிறது. இந்தக் கலை மூலம் உடலில் நரம்புகள் வலுப்பெற்று உடல் ஆரோக்கியத்துடன் வாழ முடியும் என்பது பத்ரப்பனின் கருத்து.

ஹரியாணாவைச் சேர்ந்தவர் குர்வீந்தர் சிங். ஒரு விபத்தில் உடலின் ஒரு பகுதி செயலிழந்து மூன்று சக்கர சைக்கிளில் முடங்கினாலும், தனது குழந்தைகள் பராமரிப்பு நிறுவனம் மூலம் குழந்தைகளின் கனவுகளை நனவாக்கியவர். விபத்துகளில் சிக்கியவர்கள், கர்ப்பிணிகள் என 6,000-க்கும் மேற்பட்டோருக்கு இலவச அவசர ஊர்தி சேவையை வழங்கி உதவியவர். சத்தீஸ்கரைச் சேர்ந்த பாரம்பரிய மருத்துவர் ஹேம்சந்த் மாஞ்சி. 50 ஆண்டுகளாக மாநிலம் முழுவதும், குறிப்பாக கிராமப்புறங்களில் மருத்துவ சேவையாற்றி வருகிறார்.

கேரளத்தின் காசர்கோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் சத்யநாராயணன் பெலேரி. நெல் விவசாயியான இவர் 650 பாரம்பரிய நெல் ரகங்களைத் தனது பண்ணையில் பாதுகாத்து வருகிறார். இவரைப் போல அஸ்ஸாமை சேர்ந்த விவசாயி சர்வேஸ்வர், அந்தமானைச் சேர்ந்த இயற்கை விவசாயி செல்லம்மாள், அருணாசல பிரதேசத்தைச் சேர்ந்த யனூன் ஜமோ லெகோ, கோவாவை சேர்ந்த சஞ்சய் ஆனந்த் பாட்டீல் போன்ற இயற்கையைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகத்துக்கு சேவையாற்றுபவர்களை கௌரவிப்பதும், அவர்களை ஊக்கப்படுத்துவதும்தான் விருது அறிவிப்பின் பிரதான நோக்கம். மத்திய அரசுக்கு பாராட்டுகள்!

– **ராதிகா சிவசங்கர்,** ஆசிரியர்



# அயோத்தியில் ராமர் சிலை பிராண பிரதிஷ்டை செய்தார் பிரதமர் மோடி

உலகம் முழுதும் உள்ள ஹிந்துக்களின் பல நூற்றாண்டு கால கனவு நிறைவேறியது. பிரமாண்டமாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள கோவிலில் ராம சிலைக்கு பிரதமர் மோடி பூஜை செய்து பிராண பிரதிஷ்டை செய்தார். பிராண என்றால் உயிர் கொடுத்தல், மூச்சு வழங்கல் என அர்த்தம் கொள்ளலாம்.

கர்ப்ப கிரகத்தில் பால ராமர் விக்ரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கண்களை மூடியுள்ள திரை அகற்றப்பட்டு, விக்ரஹம் உயிர்ப்பு பெறும் உச்சகட்ட சம்பிரதாயம் இது.

பகல் 12:30 மணி முதல் 12:40 மணி வரை பிராண பிரதிஷ்டை நடந்தது.

ஐந்து நூற்றாண்டு இடைவெளிக்கு பின்னர் ராமர் தன் பிறந்த வீட்டுக்கு வந்துவிட்டார் என்பதை பிரகடனம் செய்யும் இந்த வரலாற்று நிகழ்வை கொண்டாட, நாட்டு மக்கள் அனைவரும் மாலை வீடுகளுக்கு முன் ஐந்து அகல் விளக்குகள் ஏற்றி வைத்து வழிபடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிராணப் பிரதிஷ்டை விழாவை முன்னிட்டு ராம ஜோதியை ஏற்றிக் குழந்தை ராமரை வரவேற்குமாறு



பிரதமர் நரேந்திர மோடி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் கூறியிருப்பதாவது:

"குழந்தை ராமர் அயோத்திதாமில் உள்ள தமது பிரமாண்டமான ஆலயத்தில் அமர்ந்துள்ளார். இந்தப் புனிதமான சந்தர்ப்பத்தில், ராம ஜோதியை ஏற்றி, தங்கள் வீடுகளிலும் அவரை வரவேற்குமாறு நாட்டு மக்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஜெய் சியாராம்!"

நீண்டகாலமாக இரு பிரிவினர் இடையே நிலவிய மோதலும் கசப்பும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால் முடிவுக்கு வந்து, அதே சூட்டுடன் கோவில் கட்டுமான பணியும் துவங்கியதால் நாடு முழுதும் பெரும் எதிர்பார்ப்பு உருவானது.

பணி முடிந்து கோவில் திறக்கப்படுவதால் மக்களிடம் உற்சாகம் பொங்குகிறது. எங்கு பார்த்தாலும், ராமர் குறித்தும், அயோத்தி கோவில் குறித்தும் பேசப்படுகிறது.

பிரமாண்டமாக எழுந்துள்ள கோவிலில் பிராண பிரதிஷ்டை நிகழ்வு பிரதமர் மோடி தலைமையில் நடந்தது. இவருடன் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன்பகவத், உபி., முதல்வர் யோகி ஆதித்யாநாத் மற்றும் பட்டர்கள் சிலர் மட்டும் இருந்தனர்.

விழாவில் பங்கேற்க ஹிந்து மத தலைவர்கள், ஜீயர்கள், சன்னியாசிகள், பிரபலங்கள் அழைக்கப்பட்டனர்.

மத வேறுபாடு பாராமல் அயோத்தியில் உள்ள அனைவரும் குதூகலமாக வீடு, கடைகள் வீதிகளை அலங்கரிக்கின்றனர். சர்வதேச தரத்திலான விமான நிலையம், நவீன வசதிகள் கொண்ட ரயில்வே ஸ்டேஷன், மிக அகலமான சாலைகள் என ராமரின் நகரம் ஒட்டுமொத்தமாக பதுப்பிக்கப்பட்டுள்ளது.

எங்கு பார்த்தாலும், வண்ண விளக்குகள், மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ராமர் மற்றும் கோவிலின் பதாகைகள், பேனர்களும் வைக்கப்பட்டுள்ளன. நகரம் முழுதும் காவி கொடிகள் கட்டப்பட்டுள்ளன. ஒலிபெருக்கிகளில் ராம சங்கீர்த்தனங்கள், ராம நாமங்கள் ஒலிக்கின்றன. மிகுந்த மகிழ்ச்சியுடனும், உணர்வு பெருக்குடனும் குவிந்துள்ள மக்கள், 'ஜெய் ஸ்ரீ ராம்' என்று கோஷமிடுகின்றனர்.

– தமிழ் வீரன்


# பேனா குரல்

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

**RNI No.: TNTAM/2022/85375**

ஆண்டு: 02 இதழ்: 04 பிப்ரவரி 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், M.சந்திரசேகர், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், ம.திலிப் குமார், பா.சரவணன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், தமிழ்மணி, கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், அன்பு மணி, R.பிரகாஷ், இளைய தர்ஷினி, பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி**

புகைப்பட நிருபர்கள்:
**வா.கவியரசன், கா.மிதுன் சாய்**

ஓவியங்கள்: **வீ.சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. நாகராஜ்**, B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*

# கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலும், வெளியிலும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தி மண்டல போக்குவரத்து மையமாக மாற்ற வேண்டும்!

## தமிழக முதலமைச்சருக்கு பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் கடிதம்





தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட 6 அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் 9 அதிகாரிகள் என மொத்தம் 16 பேருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தின் விவரம்:-

அன்புடையீர், வணக்கம்!

பொருள்: **கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தை, நீடித்திருக்கும் போக்குவரத்துக்கான** Regional Mobility Hub-**ஆக மாற்ற வேண்டும்**

சென்னையில் இருந்து வெளியூர் செல்லும் பயணிகளுக்கான பேருந்து நிலையத்தை கோயம்பேட்டில் இருந்து கிளாம்பாக்கத்திற்கு மாற்றியதால், வெளியூர் செல்லும் பயணிகள் அவதிப்படுகின்றனர். இந்த நிலையை மாற்றவும், எதிர்காலத் தேவைகளை கருத்தில் கொண்டும் கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தை, அனைத்து பொதுப்போக்குவரத்து வசதிகளையும் ஒன்றிணைக்கும் வகையிலான, நவீனமான Regional Mobility Hub-ஆக மாற்ற வேண்டும் என வலியுறுத்தி இக்கடிதத்தை நான் எழுதுகிறேன்.

ஒன்றுக்கும் மேற்பட்ட பொதுப்போக்குவரத்து வசதிகளை ஒரே இடத்தில் நவீனமான முறையில் ஒருங்கிணைக்கும் கட்டமைப்பினை Mobility Hub என அழைக்கின்றனர். இதன்மூலம் பல்வேறு வகையான பொதுப்போக்குவரத்து வசதிகளையும் மக்கள் மிக இலகுவாக பயன்படுத்த வழிசெய்யப் படுகிறது. நெடுந்தூர பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு அவரவர் வீட்டு வாசலில் தொடங்கி, சென்றடையும் இடத்தின் வாசல் வரை எளிதாக சென்று சேரும் வசதிகளை அளிக்கும் முறை இதுவாகும்.

இதற்கான பொருள் விளக்கம் (definition) பின்வருமாறு கூறப்படுகிறது:-

• Mobility Hubs are urban infrastructures that provide at least several (two or more) shared modes of transport in the same place. (Mobility Hubs, an Innovative Concept for Sustainable Urban Mobility? Maxime Hachette & Alain L'Hostis, Springer, 2024)

• One of the essential functions of mobility hubs will be to foster seamless integration between transit modes, systems, and routes, while accommodating efficient connections to all modes of access to and from the station. (Transit Oriented Development -TOD- Guidance Document, Ministry of Urban Development, Government of India, 2016)

• A Mobility Hub is a welcoming environment that enables travellers of all backgrounds to access multiple transportation options and supportive amenities. Built on the backbone of frequent and high-capacity transit, mobility hubs offer a safe, comfortable, convenient, and accessible space to seamlessly transfer across different travel modes. (Metropolitan Transportation Commission, San Francisco Bay Area, USA, 2021)

பொதுபோக்குவரத்து வசதிகளை அதிகமாக்குதல், பாதுகாப்பான பயணத்திற்கு வழிவகுத்தல், அனைத்து பிரிவினருக்கும் மேம்பட்ட பயணத்தை அளித்தல், மக்களின் செலவுகளை குறைத்தல், நெரிசலையும் மாசுபாட்டையும் குறைத்தல், உடல்நலத்தை மேம்படுத்துதல், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பலவிதமான பலன்களை Mobility Hub அளிக்கிறது.



தனியார் கார் பயன்பாட்டை குறைத்து - பேருந்து, தொடர்வண்டி, வாடகை வாகனங்கள் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து மற்றும் ஒன்றுக்கு மேற்பட்டோர் பகிரும் போக்குவரத்து முறைகளை ஊக்குவிக்க இது பயன்படுகிறது. மேலும், மிதிவண்டி போக்குவரத்துக்கும், நடைபயணத்துக்கும் வழிவகுப்பதால் இது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தை உருவாக்கி தொற்றாநோய் (NCDs) அதிகரிப்பை தடுத்து உடல்நலத்தை மேம்படுத்துகிறது.

பெட்ரோல், டீசல் பயன்பாட்டை குறைப்பதன் மூலம் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும் காற்று மாசுபாட்டை தடுக்கவும் இது பயன்படுகிறது. மாநகரங்களை ஒரு பெருமிதமான பகுதியாக மாற்றவும் மக்களிடையே சமுதாய உணர்வை மேம்படுத்தவும் Mobility Hub வழி செய்கிறது.

நவீனமான முறையில் Mobility Hub கட்டமைப்புகளை உருவாக்கும் நடைமுறை தற்போது உலகமெங்கும் பல்வேறு மாநகரங்களில் புகழ்பெற்று வருகிறது. இந்தியாவில் கொச்சி நகரில் இந்த கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

• மாநகரின் ஒரு வட்டாரத்தில் அமைக்கப்படுவது Neighborhood Mobility Hub ஆகும்.

• மாநகரின் முதன்மையான பகுதியில் அமைக்கப்படுவது Central Mobility Hub ஆகும்.

• மாநிலத்தின் மற்ற பகுதிகளுடன் மாநகரினை இணைக்கும் வகையில் அமைக்கப்படுவது Regional Mobility Hub ஆகும்.

அத்தகையை ஒரு Regional Mobility Hub-ஆக கிளம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தை மாற்ற வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

**போக்குவரத்து சார்ந்த வளர்ச்சிக் கொள்கை (Transit Oriented Development - TOD)**

கார்களையும் தனியார் வாகனங்களையும் சார்ந்த பழைய நகர்ப்புறப் போக்குவரத்து முறைகள் சுற்றுச்சூழலைச் சீர்கெடுத்து, மக்களின் உடல்நலத்தைப் பாதித்து, ஏற்றத்தாழ்வை அதிகரிப்பதாக இருக்கிறது. இதற்கு நேர்மாறாக ஒருங்கிணைந்த, இயற்கையை அதிகம் பாதிக்காத, மக்களின் நலவாழ்வுக்கு நன்மைபயக்கும் போக்குவரத்து முறைகளை ஊக்குவிப்பது போக்குவரத்து சார்ந்த வளர்ச்சி (Transit Oriented Development - TOD) ஆகும். இதனை இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் இதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் 2022-23 கொள்கை அறிக்கையில் சென்னை மாநகரில் இதனைப் பின்பற்றுவோம் என அறிவித்துள்ளது.

1.நடைபாதை (Walk), 2.மிதிவண்டி (Cycle), 3.இவற்றுக்கான பாதைகளை இணைத்தல் (Connect), 4.அதிகமான மக்கள் பயணிக்கும் பொதுப்போக்கு வரத்து மற்றும் அதனுடன் இணைந்த பாதைகள் (Transit), 5.போக்குவரத்துப் பாதைகளிலேயே பலதரப்பட்ட சேவைகளும் கிடைக்கச் செய்தல் (Mix), 6.குறுகிய பரப்பளவில் அதிகமான மக்கள் வசிக்கும் சூழலை உருவாக்குதல் (Densify), 7.ஏற்கெனவே இருக்கும் நகரப்பகுதியை வளர்த்தல் (Compact), 8.தனியார் கார்களுக்கான தேவையைக் குறைத்து, நகரில் அவற்றுக்கான இடத்தையும் குறைத்தல் (Shift) ஆகியன போக்குவரத்து சார்ந்த வளர்ச்சிக் கொள்கைகளாகக் கொள்ளப்படுகின்றன.

மேற்கண்ட அறிவியல்பூர்வமான TOD வழிமுறைகள் அனைத்தையும் ஒருங்கிணைந்த முறையில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தவில்லை. மாறாக, “குறுகிய பரப்பளவில் அதிகமான மக்கள் வசிக்கும் சூழலை உருவாக்குதல் (Densify)” என்கிற ஒரே ஒரு TOD கருத்தை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, கட்டுமான நிறுவனங்களுக்கு சாதகமாக, சென்னை MRTS பறக்கும் ரெயில்பாதை மற்றும் கடற்கரை, வண்டலூர், மீஞ்சூர், திருநின்றவூர் இடையேயான அனைத்து நகர்ப்புற ரயில்பாதைகளுக்கு இருபுறமும் தளப்பரப்பு குறியீட்டு (floor space index - FSI) விதிகளை தளர்த்தி 14.01.2024இல் தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. ஆனால், TOD கொள்கையின் முதன்மையான பொதுப்போக்குவரத்து வழிமுறைகளை செயலாக்குவதற்கு தமிழ்நாடு அரசு முன்னுரிமை தரவில்லை. இந்த நிலை மாற வேண்டும்.

Mobility Hub கட்டமைப்புகளை உருவாக்குவது Transit Oriented Development கொள்கையின் ஒரு முக்கியமான அங்கம் ஆகும். சென்னை மாநகரில் இக்கட்டமைப்புகளை அமைக்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

**Regional Mobility Hub: கட்டமைப்புகளின் உத்தேச பட்டியல்**

Mobility Hub கட்டமைப்பு முறைகள் நவீனமானவை ஆகும். கடந்த 15 ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் பல்வேறு நகரங்களில்

அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கு ஏற்ப செயலாக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டின் சூழலில் பொதுவாக பின்வரும் கட்டமைப்புகளைக் கொண்டு Mobility Hub உருவாக்கப்பட வேண்டும்.

• வெளியூரில் இருந்து வரும் பேருந்துகளுக்கும் - மாநகர பேருந்துகளுக்கும் இடையே முழுமையான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் உடனுக்குடன் MTC பேருந்து இணைப்பு கிடைக்க வேண்டும்.

• தொடர்வண்டி, மெட்ரோ இணைப்பு எளிதாகவும் உடனுக்குடனும் கிடைக்க வேண்டும்.

• ஆட்டோ, வாடகை கார் இணைப்பு எளிதாகவும் நியாயமான கட்டணத்திலும் கிடைக்க வேண்டும்.

• மேற்கண்ட அனைத்து போக்குவரத்து வசதிகளுக்கும் பயணிகள் எளிதாக செல்வதற்கு இணைப்பு வசதிகள் இருக்க வேண்டும். தடையற்ற வழிகள், நகரும் படிக்கட்டுகள், மின்தூக்கி வசதிகள், நடை மேம்பாலம், சுரங்கப்பாதை உள்ளிட்ட வசதிகள் வேண்டும்.

• தனியார் வாகனங்கள், ஆட்டோக்கள், வாடகை கார்களில் வருவோர் எளிதாக இறங்கவும் ஏறவும் வசதிகள் வேண்டும்.

• கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து எளிதில் அணுகும் வகையில் தரமான, இலகுவான நடைபாதைகள் அமைக்க வேண்டும்.

• சுமார் 5 முதல் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளோர் மிதிவண்டி மூலம் புறநகர் பேருந்து நிலையத்தை அணுகும் வகையில் பாதுகாப்பான மிதிவண்டி பாதை அமைக்க வேண்டும். போதுமான இலவச மிதிவண்டி நிறுத்தம் வேண்டும்.

• இருசக்கர வாகன நிறுத்தம் கட்டுப்படியான கட்டணத்தில் இருக்க வேண்டும். அதே நேரத்தில், தனியார் கார் பயன்பாட்டை ஊக்குவிக்கக் கூடாது.

• அனைத்து இடங்களுக்கும், அனைத்து போக்குவரத்து வசதிகளுக்கும் வழிகாட்டும் பலகைகள், இலச்சினைகள் வேண்டும்.

• மாநகர பேருந்துகள், தொடர்வண்டி, மெட்ரோ இரயில்களின் புறப்பாடு குறித்த நேரலை நேர அட்டவணைகள் புறநகர் பேருந்து நிலையத்திற்குள் பல இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.

• இலவச வைஃபை இணைப்பு, செல்பேசி மின்னூட்ட வசதிகள் இருக்க வேண்டும்.

• வழிகாட்டும் பணியாளர்கள் இருக்க வேண்டும்.

• இலவச கழிப்பிடங்கள், தூய்மையான காத்திருப்போர் பகுதி தேவை

• தூய்மை, வெளிச்சம், பாதுகாப்பு உள்ளிட்டவை பராமரிக்கப்பட வேண்டும்.

• கடைகள், உணவங்கள் தரமாகவும் கட்டுப்படியாகும் விலையிலும் இருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு, Regional Mobility Hub போக்குவரத்து நிலையத்தில் இருக்க வேண்டிய வசதிகளில் பெரும்பாலானவை கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தில் இல்லை. இதனை மாற்றி ஒரு முழுமையான Regional Mobility Hub-ஆக கிளாம்பாக்கத்தை மேம்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

**உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள்**

• உடனடியாக 300 முதல் 500 புதிய MTC பேருந்துகளை கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை மாநகர் மற்றும் புறநகரப் பகுதிகளுக்கு இயக்க வேண்டும்.

• கிளாம்பாக்கம் தொடர்வண்டி நிலையத்தை உடனடியாக அமைத்து, நகர்ப்புற தொடர்வண்டிகள் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும். வெளியூர் செல்லும் தொடர்வண்டிகள் நின்று செல்லும் நிலையமாகவும் இது அமைய வேண்டும். (மேலும், வேளச்சேரி - பரங்கிமலை MRTS பறக்கும் இரயில் திட்டத்தில், கடந்த 17 ஆண்டுகளாக கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் 500 மீட்டர் இணைப்பை கட்டி முடித்து, உடனடியாக தொடர்வண்டிகளை இயக்க வேண்டும்.)

• கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையம் - இனி அமைக்கப்பட இருக்கும் தனியார் புறநகர் பேருந்து நிலையம் இரண்டுக்கும் இடையே கட்டணமில்லா பேருந்து இணைப்பை உருவாக்க வேண்டும்.

• சென்னை விமான நிலையம் - கிளாம்பாக்கம் இடையே உடனடியாக மெட்ரோ இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

• கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தை Regional Mobility Hub-ஆக மாற்றும் திட்டத்தை உடனடியாக வகுத்து செயல்படுத்த தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

மேலும், சென்னை மாநகரின் 16 பேருந்து பணிமனைகளை வணிக வளாகங்களாக மாற்றும் முயற்சியை கைவிட்டு, அவற்றை மாநகர அளவிலான Mobility Hub-ஆக மாற்ற வேண்டும். அவற்றுடன் கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்திற்கு தொடர்ச்சியான பேருந்து இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

**– நா.வீ.சிவசங்கர்**


தி உமன்'ஸ் ஃபேஷன் ஹவுஸ்
THE WOMEN'S FASHION HOUSE
இங்கு பெண்களுக்கு தேவையான பேன்சி பொருட்களும் புடவைகள் சுடிதார் வகைகள்.
லெகின்ஸ். நைட்டி. உள்ளாடைகள். டி சர்ட். ஜீன்ஸ் பெட்டி கோட்ஸ் மற்றும்
குழந்தைகளுக்கான ஆடை வகைகள் நியாயமான விலையில் நல்ல தரத்துடன் கிடைக்கும்
எண்: 1/33, பிள்ளையார் கோவில் தெரு, திருப்புலிவனம், காஞ்சிபுரம் மாவட்டம் - 603406.
97908 66564

# கூட்டுறவு வங்கி கல்வி கடன் ரூ.5 லட்சமாக அதிகரிப்பு

கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வி கடனுக்கான உச்சவரம்பை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்.சுப்பையன் உத்தரவிட்டுள்ளார்.

கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் மாநில தலைமை கூட்டுறவு வங்கி மத்திய கூட்டுறவு வங்கிகள் நகர கூட்டுறவு வங்கிகளில் ஒரு லட்சம் ரூபாய் வரை கல்வி கடன் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வி கடனுக்கான உச்சவரம்பு 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இதுகுறித்து பதிவாளர் என்.சுப்பையன் கூட்டுறவு வங்கிகளின் மேலாண் இயக்குனர்கள் மண்டல இணை பதிவாளர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

தமிழகத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மாணவர்கள் நலன் கருதி கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கும் கல்வி கடன் உச்சவரம்பை 5 லட்சம் ரூபாய் வரை உயர்த்த அனுமதி அளிக்கப்படுகிறது.

தலைமை கூட்டுறவு வங்கி மத்திய கூட்டுறவு வங்கிகள் நகர கூட்டுறவு வங்கிகள் நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் கடன் வழங்கலாம். ஒரு லட்சம் ரூபாய் வரை பிணையம் இன்றி வழங்கலாம்.



அதற்கு மேல் 5 லட்சம் ரூபாய் வரை அளிக்கப் படும் கடனுக்கு பிணையம் பெறப்பட வேண்டும். டியூஷன் கட்டணம் தங்கும் விடுதி கட்டணம் உணவு கட்டணம் ஆய்வக கட்டணம் உள்ளிட்ட கட்டணங்கள் சேர்த்து கடன் வழங்க வேண்டும்.

கடனுக்கான வட்டி விகிதம் அந்தந்த வங்கியில் உள்ள சொத்து பொறுப்பு குழு வாயிலாக நிர்ணயம் செய்யப்படும்.

கல்வி பயிலும் காலம் முடிந்து ஆறு மாதங்கள் கழித்து வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் கடனை வட்டியுடன் செலுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலை வழங்கும் டிப்ளமா படிப்பு தொழில்முறை படிப்பு இளங்கலை முதுகலை பட்ட படிப்புகளுக்கு கடன் வழங்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

– R.பிரகாஷ்

# இந்தியாவில் நிலுவை வழக்குகள் எண்ணிக்கை 5 கோடியை கடந்தது

இந்தியாவில் கடந்த ஜனவரி மாத நிலவரப்படி, உச்சநீதிமன்றம் உட்பட அனைத்து நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை 5,10,68,227 ஆகும்.

உச்சநீதிமன்றத்தில் 80,221, உயர்நீதி மன்றங்களில் 62,00,061, மாவட்டம் மற்றும் தாலுகா நீதிமன்றங்களில் 4,47,87,945 வழக்குகளும் உள்ளன.

இதில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக 1,10,558 வழக்குகள் நிலுவையில் உள்ளன.





# யாசகம் பெறுவோர் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது

யாசகம் பெறுவோர் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக கலாச்சாரம், வரலாறு அல்லது சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த 30 நகரங்களை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை தேர்வு செய்துள்ளது.

வடக்கில் அயோத்தி, தெற்கில் திருவனந்தபுரம், கிழக்கில் குவாஹாட்டி, மேற்கில் திரிம்பகேஷ்வர் என நாட்டின் அனைத்து பகுதிகளைச் சேர்ந்த நகரங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, மதுரை, கோழிக்கோடு, விஜயவாடா, மைசூரு உள்ளிட்ட நகரங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த 30 நகரங்களிலும், 'விளிம்புநிலையில் உள்ள தனிநபர்களின் வாழ்வாதாரத்துக்கு ஆதரவளித்தல்' (ஸ்மைல்) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக வரும் 2026-ம் ஆண்டுக்குள் யாசகம் பெறுவோர் இல்லாத நிலையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்காக, 30 நகரங்களிலும் சம்பந்தப்பட்ட மாவட்ட மற்றும் நகராட்சி அதிகாரிகள் உதவியுடன் யாசகம் பெறும் முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

அதன் பிறகு யாசகம் பெறுவோர் மீட்கப்பட்டு, மறுவாழ்வு மையங்களில் சேர்க்கப்படுவார்கள். அங்கு அவர்களுக்கு உணவு, தங்குமிடம் வழங்கப்படுவதுடன் வாழ்வாதாரத்துக்கு தேவையான கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட உதவிகள் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு மற்றும் மறுவாழ்வு பணிகள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதி செய்வதற்காக, யாசகம் பெறுவோர் பற்றிய விவரங்களை பதிவேற்றம் செய்வதற்கு ஏதுவாக தேசிய அளவிலான இணையதளம் மற்றும் செல்போன் செயலி வரும் பிப்ரவரி மாதம் அறிமுகம் செய்யப்படும்.

இந்த திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான செயல் திட்டங்கள் 25 நகரங்களிடமிருந்து ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்ய உள்ளது.

காங்ரா, கட்டாக், உதய்பூர் மற்றும் குஷிநகர் ஆகிய 4 நகரங்களில் இருந்து செயல் திட்டங்கள் பெற வேண்டி உள்ளது. இதுதவிர சாஞ்சி நகரில் யாசகம் பெறுவோர் யாரும் இல்லை என அந்த நகராட்சி நிர்வாகம் தெரிவித்துவிட்டது.

– K.மாரிதுரை

# RS PRINTZY

**DTP**
**தமிழ்**
**&**
**ENGLISH**

**DESIGN**
- NEWSPAPER
- MAGAZINE
- NOVEL BOOKS
- BILL BOOKS
- LETTER PAD

- ALL TYPE ID CARDS
- V-CARDS
- PVC CARDS
- STICKERS

- LOGO DESIGN
- PAMPHLET
- FLEX / VINYL
- WEDDING CARDS
- POSTER

3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097.

**8754582123, 9962245338, 044-35906002**

Email: rsprintzy@gmail.com

# திருநள்ளாறில் சனீஸ்வரரை வழிபடும் முறை

முதலில் நளதீர்த்தம் சென்று, குளத்தை வலமாக பிரதட்சணம் செய்து குளத்தில் நடுவில் இருக்கும், நளன், தமயந்தி குழந்தைகள் சிலைகளை வணங்க வேண்டும்.

நல்லெண்ணெய் தேய்த்து, வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று 9 முறை மூழ்கி எழ வேண்டும். பின், பிரம்ம தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தங்களில் தண்ணீர் தெளித்துக் கொள்ள வேண்டும்.

கோயிலுக்குள் உள்ள சுவர்ண கணபதியை வணங்கி, சுப்ரமணியர் சந்நிதியை தரிசனம் செய்தபின், மூலவர் தர்ப்பாரண்யேஸ்வரரையும், பின் தியாகேசரையும் தரிசிக்க வேண்டும்.

வலமாக வந்து, அம்மன் சந்நிதியை தரிசிக்க வேண்டும். கடைசியாக சனிபகவான் சந்நிதி வந்து வழிபட வேண்டும். பின்னர் பெரிய பிரகாரத்தை வலம் வர வேண்டும்.

அவரவர்களுடைய வசிக்கும் சக்திக்கும் ஏற்றபடி சனிபகவானுக்கு அர்ச்சனை, அபிஷேகம், ஹோமம், தர்ப்பணம், ரட்சை தானம், பிரீதி நவ நமஸ்காரம், நவ பிரதட்சணம் செய்யலாம். எல்லாநாளும் சனீஸ்வரரை வணங்கலாம்.

திருநள்ளாறு க்ஷேத்ரம் சனிபகவானுடன், தர்ப்பாரண்யேஸ்வரர் உள்ளிட்ட மூர்த்திகளையும் கொண்டது. இங்கு சனிக்கிழமை மட்டும் தான் வழிபட வேண்டும் என்று சிலர் தவறாக வழிகாட்டுகின்றனர்.

இதனால் பக்தர்கள் கால்கடுக்க நின்று, சில நிமிடம் மட்டுமே சனிபகவானை தரிசனம் செய்யும் நிலை ஏற்படுகிறது.

ராகுகாலத்தில் ராகுவை வழிபடுவதைப் போன்றே சனிபகவானை, சனிஹோரை நேரத்தில் வழிபடலாம். இதன்படி ஞாயிறு காலை 10-11, மாலை 5-6, திங்கள் காலை 7-8, செவ்வாய் பகல் 11-12, இரவு 6-7, புதன் காலை 8-9, வியாழன் பகல் 12-1, இரவு 7-8, வெள்ளி காலை 9-10, மாலை 4-5, சனிக்கிழமை காலை 6-7, மதியம் 1-2, இரவு 8-9, ஆக இந்த வார நாள் நேரங்களிலும் சனிபகவானை வழிபட்டு அவரின் பரிபூரண அருளைப் பெறலாம்.

சனிக்கிழமை விரதம்: சனிக்கிழமைதோறும் ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு, சனிபகவான் ஸ்தோத்திரங்களை சொல்ல வேண்டும்.



சிறிது எள்ளை பொட்டலமாக கட்டி தினமும் இரவு படுக்கும் போது அதனை தலைக்கு அடியில் வைத்து படுத்து மறுநாள் காலையில் அதனை அன்னத்தில் கலந்து காகத்திற்கு அன்னமிடலாம்.

இதனை நமது வசதிக்கேற்ப 9, 48, 108 வாரங்கள் என பின்பற்றலாம். தேங்காய் முறியில் நல்லெண்ணை விட்டு எள்ளு முடிச்சிட்டும், அல்லது எள் தீபம் (தில தீபம்) ஏற்றலாம். சனிபகவானுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து கருப்பு அல்லது நீலவஸ்திரம், வடைமாலை சாத்தலாம். எள் சாதம் நைவேத்யம் செய்யலாம். அர்ச்சகர், அந்தணர் ஏழை களுக்கு அவற்றை விநியோகம் செய்ய வேண்டும். சனிபகவானுக்கு நவக்கிரக சாந்தி ஹோமம், அபிஷேக ஆராதனை மண்டல பூஜை செய்யலாம்.

எள்ளை சுத்தம் செய்து வறுத்த வெல்லம், ஏலக்காய் பொடியுடன் இடித்து திலசூரணம் செய்து வெங்கடேசப் பெருமாளுக்கும் சனிபகவானுக்கும் படைத்து வினியோகிக்கலாம்.

ஆஞ்சநேயர், தர்மராஜன் ஆகிய தேவதைகளை ஆராதனை செய்யலாம். அவரவர் பிறந்த ஜன்ம நட்சத்திரம் அல்லது சனிபகவானின் ஜென்ம நட்சத்திரமான ரோகிணியில் அர்ச்சனை செய்யலாம். எல்லா நாளும் சனிஹோரை நேரத்தில் வழிபடலாம்.

– கா.சுபுலட்சுமி

**தன்னுயிர் போல் பிற உயிர்களையும் எண்ணிக் கருணை கொண்டு அவை துன்பமுறும்போது, தம் துன்பம்போல் கருதி இடர்நீக்க முற்படுவதே மனிதன் தாம் பெற்ற அறிவின் இயல்பு!**

– நா.வீ.சிவசங்கர்



**ஐந்தறிவு ஜீவன்களுக்கு தன் வாழ்நாளை அர்ப்பணித்துள்ள கலா - குபேந்திரன் தம்பதியினர்**

சென்னை தண்டையார் பேட்டையில் இயங்கி வரும் (அனிமல் கேர் டிரஸ்ட்) பிராணிகள் நல அறக்கட்டளையை கலா குபேந்திரன் தம்பதியினர் நடத்தி வருகின்றனர். சிங்கப்பூர் தமிழர்களான திருமதி. ஜீவா – இளம்பரிதி தம்பதியினர் இதற்கு பெரிதும் உதவிகரமாக இருந்துள்ளனர்.

சிறு வயது முதற்கொண்டே திருமதி.கலா பிராணிகள் மீது அளப்பரிய அன்பும், அளவற்ற கரிசனமும், பாசமும் கொண்டு இருந்தார். நாய் குட்டிகளை வாஞ்சையோடு அள்ளி அவற்றிற்கு உணவு கொடுத்து பசி ஆற்ற ஆசைப்பட்ட கலாவிற்கு அவரது கணவர் குபேந்திரன் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து உறுதுணையாக இருந்து வருகிறார்.



வாடகை வீட்டில் தங்கியிருந்த கலா குபேந்திரன் தம்பதியினர் நாள்தோறும் 200க்கும் மேற்பட்ட தெருக் குழந்தைகளுக்கு (நாய் குட்டிகள்) ஆட்டோவில் சென்று உணவளித்து வந்தனர்.

மேலும் சாலைகளில் அடிபட்டு கை, கால்களில் காயம் ஏற்படும் நாய் மற்றும் பூனைக்குட்டிகளை கலா மற்றும் குபேந்திரன் தங்களது வீட்டில் வைத்து சிகிச்சை அளிக்க ஆரம்பித்தனர். சாலை விபத்துகளில் அடிபட்டு இரண்டு கால்கள், இரண்டு கண்கள், பின்முதுகு முழுவதும் சிதைந்த நாய் மற்றும் பூனைக்குட்டிகளையும் தங்களது நிகரற்ற அன்பினால் மருத்துவமனையில் சேர்த்து, சிகிச்சை அளித்து குணமாக்கி, அடைக்கலம் கொடுத்து, அக்கறையுடன் பராமரித்து அவற்றின் வாழ்நாளை நீட்டித்து வருகின்றனர்.



இதோடு மட்டும் அல்லாமல் சாலைகளில் உயிரிழக்கும் நூற்றுக்கணக்கான நாய் மற்றும் பூனைக்குட்டி களை வாஞ்சையோடு அள்ளி அதனை இடுகாட்டிற்கு கொண்டு சென்று நல்லடக்கமும் செய்து வருகின்றனர்.

**கலாவிற்கு கைக்கொடுத்த மண்ணின் மைந்தர்**

நாள்தோறும் அடிபட்டு கலாவின் வீட்டிற்கு நூறுக்கும் மேற்பட்ட நாய் மற்றும் பூனைக்குட்டிகள் வர துவங்கிய நிலையில் அவற்றை வைத்து பராமரிக்க போதுமான இடம் இல்லாமல் தத்தளித்தார்.



கலாவின் சூழலை தொலைக்காட்சிகள் செய்தியாக ஒளிபரப்பு செய்யவே, இதனை கண்ட சிங்கப்பூரை சேர்ந்த தமிழ் குடும்பமான திருமிகு இளம்பரிதி - ஜீவா தம்பதியினர் வாடகை வீட்டில் தங்கி பல சிரமங்களை எதிர்கொண்டு வந்த கலாவிற்கு தற்காலிகமாக ஒரு பழைய கட்டிடத்தை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர். அவர்களின் இந்த பேருதவியால் தற்போது அந்த பழைய கட்டிடத்தில் கலா குபேந்திரன் தம்பதியினர் இந்த பிராணிகளை வைத்து பராமரித்து வருகின்றனர்.

பிராணிகளை பராமரிக்க நிரந்தரமான இடம் கிடைக்க தன்னார்வலர்கள் அல்லது பிராணிகள் மீது அன்பு கொண்டவர்கள் உதவே வேண்டும் என்பதே கலாவின் தாழ்மையான கோரிக்கை.

தற்போது நாள்தோறும் சுமார் 250க்கும் மேற்பட்ட தெரு நாய் குட்டிகளுக்கு அவைகளின் இருப்பிடத்திற்கு ஆட்டோவில் சென்று உனவளித்து வரும் கலா, தனது காப்பகத்தில் மட்டும் சுமார் 200 பிராணிகளை வைத்து பராமரித்து வருகிறார்.

சுற்றுவட்டார பகுதியில் எங்கு நாய்க்குட்டிகள் அடிபட்டாலும் கலாவை தொடர்பு கொண்டு தன்னார்வலர்கள் நாய் குட்டிகளை கலாவிடம் ஒப்படைப்பதால் அவற்றை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்க ஒரு மாதத்திற்கு மருத்துவ செலவுகள் மட்டுமே 20 ஆயிரம் (தோரயமாக) ரூபாயில் இருந்து 40 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது. தொடர்ந்து ஒரு சிலர் உதவினாலும் இந்த ஜீவன்களை பாதுகாக்க மேலும் பலரின் உதவியை நாடும் நிலையில் கலா உள்ளார்.



இல்லத்தில் உள்ள 200-க்கும் மேற்பட்ட நாய்குட்டிகளுக்கும்,

50-க்கும் மேற்பட்ட பூனைகளுக்கும் மற்றும் சுற்றுவட்டார தெருக்களில் உள்ள நாய்குட்டிகளுக்கும் அன்றாடம் உணவளிக்க உதவுங்கள்.

ஐந்தறிவு ஜீவன்கள் மீது அக்கறையும், ஆத்மார்த்தமான அன்பும் கொண்ட மனித தெய்வங்களான உங்களால் முடிந்த சிறிய உதவியை செய்ய வேண்டுகிறோம். பிராணிகளுக்கு உணவளிக்க, மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள நீங்களும் உதவலாமே!



வீடுகளில் செல்லப்பிராணிகளை வளர்ப்போர், விலங்குநல ஆர்வலர்கள், விலங்குகளை நேசிப்போர் தங்களால் முடிந்த உதவியை செய்வதோடு மேற்கண்ட விவரங்களை மற்றவருக்கு தெரிவித்து அதன்மூலம் இந்த சேவைக்கு உதவி கிடைக்க செய்வது, காலம் காலமாய் மனிதனோடே பயணித்து, மனிதனை மட்டுமே நம்பி உயிர் வாழ்ந்து வரும் நாய்குட்டிகள் மற்றும் பூனைகளை காப்பாற்றி பேணி பாதுகாக்க பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

**உங்களின் சிறிய உதவி அவைகளின் பசியை போக்குவதோடு நீண்டகாலம் ஆரோக்கியமாகவும், நிம்மதியாகவும் வாழ வழிவகை செய்யும்!**

Account details:
**BANK OF BARODA**
**Beneficiary : Animal Care Trust**
**IFSC Code : BARBOTIRUVA**
**Account number: 06780100016005**

**Contact:**
**9003150947, 8925270027**

# “தாய் தமிழ்நாட்டிற்கு உதவிகள் செய்ய வேண்டும்”

## ஸ்பெயின் தமிழ் கலாச்சார நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு




தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறார்.

அங்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, ‘ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்’ எனும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்கள் திரண்டிருந்த அந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்துரையாடினார்.

தமிழ்நாட்டில் இருக்கிறோமா அல்லது வெளிநாட்டில் இருக்கிறோமா என்று எனக்கு இப்போது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்பெயின் நாட்டிற்கு இப்போதுதான் நான் முதல்முறை வருகிறேன். ஆனால், பலமுறை வந்ததைப் போன்ற உணர்வைத் தரும் வரவேற்பை நீங்கள் அளித்திருக்கிறீர்கள். கடல் கடந்து வந்து வெளிநாட்டில் வாழும் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் பிறந்த உங்களுடைய தாய் மண்ணான தமிழ்நாட்டிற்கு உங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும், செய்து கொண்டிருக்கிறீர்கள். செய்யப் போகிறீர்கள். செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அயல்நாட்டில் இருக்கக் கூடியவர்களுக்காகவே துணை நிற்க வேண்டும். உதவி புரிய வேண்டும். அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள், ஆபத்து ஏற்பட்டால், அதற்குத் தமிழ்நாடு துணை நிற்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் ஒரு அமைப்பை உருவாக்கினார்.

ஆனால் சில நாட்களுக்குள்ளாக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. அதனால் அது செயல்படாமல் போய்விட்டது. இப்போது மீண்டும் தலைவர் கலைஞர் வழியில் நடைபோடும் நமது திராவிட மாடல் ஆட்சி உருவாகி இருக்கிறது. தலைவர் கலைஞர் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அதனை நாங்கள் செய்ய காத்திருக்கிறோம். தயாராக இருக்கிறோம்.

அண்மையில்கூட, வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களைச் சென்னைக்கு வரவழைத்து, அவர்களுடன் கலந்து பேசி. இதுவரை அவர்களை இரண்டு மூன்று முறை அழைத்துக் கூட்டம் போட்டு கலந்து பேசி, அவர்களது பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்திருக்கிறோம். உலக முதலீட்டாளர் மாநாட்டை அண்மையில் வெற்றிகரமாக நடத்தி, அதன் மூலமாகத் தமிழ்நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறோம். அது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல. இந்தியாவிற்கு மட்டுமல்ல. இந்தியாவைக் கடந்து, இன்றைக்குக் கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்கும் அது பெருமைதான்.

பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்று இருந்தாலும், இந்த ஸ்பெயின் நாட்டிற்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். பெருமைப் படுகிறேன். என் மீது ஒவ்வொருவரும் பாசமும் நேசமும் அன்பும் கொண்டு அளித்த அந்த உபசரிப்பு என்னை நெகிழ வைத்து இருக்கிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, முதல் அமைச்சரின் செயலாளர் டாக்டர் உமாநாத் ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் பட்நாயக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

– பா.நவின்குமார்


## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT **PENA KURAL**, TAMIL MONTHLY

## FORM IV (See Rule 8)

| | |
|---|---|
| 1. RNI Number | : **TNTAM/2022/85375** |
| 2. Language | : **Tamil** |
| 3. Periodicity | : **Monthly** |
| 4. Publisher Name | : **NV SIVASHANKAR** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : **7/13, 2nd Floor, Ponmanachemmal St, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 5. Place of publication | : **7/13, 2nd Floor, Ponmanachemmal St, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 6. Printer Name | : **NV SIVASHANKAR** |
| (a) Nationality | : **Indian** |
| (b) Address | : **7/13, 2nd Floor, Ponmanachemmal St, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 7. Editor Name | : **RATHIKA S** |
| 8. Price Per Copy | : **Rs. 20/-** |

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

Dated: **10.02.2024**

**NV SIVASHANKAR**
Publisher

# என்றும் இளமைக்கு கடுக்காய்



நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். இதனாலேயே நோய் தோன்றுகிறது.

உஷ்ணத்தால் பித்த நோய்களும், காற்றினால் வாத நோய்களும், நீரால் கப நோய்களும் உண்டாகின்றன.

நமது தேகத்தை நீட்டித்து, ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர். கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும். "பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள்.

கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளையெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப் பயனை நீட்டித்து வருகிறது. கடுக்காயின் சுவை துவர்ப்பாகும். நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும். நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு. துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும். பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?

அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம். கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, மேல் தோலை மட்டும் நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

**கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்:**

கண் பார்வைக் கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப்புண், குடற்புண், ஆசனப்புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப்படுதல், சிறுநீர் குழாய்களில் உண்டாகும் புண், சிறுநீர் எரிச்சல், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், சீழ்மூலம், ரத்தமூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள் போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய். இதை பற்றி சித்தர் கூறும் பாடல்...

"காலை இஞ்சி,
கடும்பகல் சுக்கு,
மாலை கடுக்காய் ..... மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே.

காலை வெறும் வயிற்றில் இஞ்சி- நண்பகலில் சுக்கு - இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம்.

– **கா.கலைமணி**

# வேட்பாளர்கள் குழந்தைகளை பரப்புரை, பேரணிகளில் ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டும்:

## தலைமை தேர்தல் ஆணையம்

மக்களவை தேர்தலின் போது குழந்தைகளை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த ஆணையம் தடை விதித்துள்ளது. மத்தியில் யார் ஆட்சி அமைக்கப் போகிறார்கள்? என்பதை முடிவு செய்யும் 18வது மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவுள்ளது. நடப்பு மக்களவையின் பதவிக் காலம் ஜூன் 16, 2024ல் முடிவடைகிறது. அதற்கு முன்னதாக தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே மக்களவைத் தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. தேர்தலைச் சந்திக்க அரசியல் கட்சியினர் தயாராகி வருகின்றனர். தேர்தலுக்கான குழுக்கள் அமைப்பு, கூட்டணி பேச்சுவார்த்தை போன்ற பணிகளை கட்சிகள் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில், மாநில தேர்தல் ஆணையர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், தேர்தல் தொடர்பான எந்த ஒரு பணிகளிலும் குழந்தைகளை பணி செய்ய அனுமதிக்கக்கூடாது. சுவரொட்டிகள் ஒட்டுதல், துண்டு பிரசுரம் விநியோகம், முழக்கம் எழுப்புதல், தேர்தல் பரப்புரை பேரணிகளில் குழந்தைகளை ஈடுபடுத்தக்கூடாது. அரசியல் தலைவர்கள், வேட்பாளர்கள் குழந்தைகளை கையில் தூக்கி செல்வது, பிரச்சாரம், பேரணி வாகனங்களில் குழந்தைகளை ஏற்றுவதற்கு அனுமதியில்லை. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அருகிலோ, கூட்டங்களில் பெற்றோருடன் குழந்தைகள் பங்கேற்றால் விதிமீறல் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

– Bா.சரவணன்




# கேரள அரசுக்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும்:

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்-மந்திரி பினராயி விஜயனுக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:-

மாநில அரசுகளின் நிதி நிர்வாகத்தில் தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசுக்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசு சில காலமாகவே மாநில அரசுகளுக்கு எதிராக இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நிலைமை வேகமாக மோசமடைந்துள்ளது. மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் இத்தகைய மறைமுகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் முற்போக்கான மாநிலங்களிடையே தெளிவான, ஒருமித்த கருத்து உருவாகி உள்ளது.

GSTIN: 33AHVPB4288K2ZU

V.Balasubramaniam

# VAAGARTHA

## Magazines & Journals

**GOC Member**



Subscription services for

- Medical Journals
- Dental Journals
- Engineering Journals

+91 8939868647

vaagarthajournals@gmail.com

No. 46 / 29, 1st Floor,
Ragam Bakery, Anderson Road,
Ayanavaram, Chennai - 600023

# நாடு முழுவதும் 12,146 பொது மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள் செயல்படுகின்றன



இந்தியாவில் மின்சார வாகனங்களை ஊக்குவிக்க கனரக தொழில்கள் அமைச்சகம் நிலையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. விரைவாக மின்சார வாகனத்தை உற்பத்தி செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் எனப்படும் ஃபேம் (FAME-II) திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் மின்சார வாகன பயனர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக பொது மின்னேற்ற (சார்ஜிங்) உள்கட்டமைப்பை அமைப்பதற்கான மானிய வடிவிலான நிதி உதவி வழங்கும் திட்டமும் அடங்கும்.

நாட்டில் பொது மின்சார வாகன மின்னேற்ற உள்கட்டமைப்பை நிறுவுவதை விரைவுபடுத்த மின்சார அமைச்சகம் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பொது மின்னேற்ற நிலையத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

02.02.2024 நிலவரப்படி, மின்சார அமைச்சகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, நாடு முழுவதும் 12,146 எண்ணிக்கையிலான பொது மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொருத்தவரை 643 மையங்கள் செயல்படுகின்றன.

மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கனரகத் தொழில்துறை இணையமைச்சர் திரு கிருஷன் பால் குர்ஜார் இதனைத் தெரிவித்துள்ளார்.

– A.தங்கராஜ்

# மத்திய ஆயுதப்படைகளில் பெண்கள்

மத்திய ஆயுத காவல் படைகள் (சிஏபிஎஃப்) மற்றும் அசாம் ரைபிள்ஸ் (ஏஆர்) ஆகியவற்றில் தற்போதுள்ள பெண் பணியாளர்களின் எண்ணிக்கை 41,606 ஆகும். மத்திய ஆயுத காவல் படை மற்றும் ஆயுதப்படை ஆகியவற்றில் பெண் பணியாளர்களை பணியமர்த்துவதை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள்:

- அச்சு / மின்னணு ஊடகங்கள் மூலம் பரவலான விளம்பரம் மூலம் ஆட்சேர்ப்பு நடத்தப்படுகிறது. அனைத்து பெண் விண்ணப்பதாரர்களுக்கும் விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- மத்திய ஆயுத காவல்படைகளில் ஆட்சேர்ப்பின் போது பெண் விண்ணப்பதாரர்களுக்கு, உடற்தகுதித் தேர்வு (பி.எஸ்.டி) மற்றும் உடல் திறன் தேர்வு (பி.இ.டி) ஆகியவற்றில் ஆண்களுடன் ஒப்பிடும்போது தளர்வுகள் உள்ளன.
- மத்திய அரசின் கீழ் ஏற்கனவே உள்ள மகப்பேறு விடுப்பு, குழந்தை பராமரிப்பு விடுப்பு போன்ற வசதிகள் மத்திய ஆயுத காவல் படையின் பெண் பணியாளர்களுக்கும் பொருந்தும்.
- மத்திய ஆயுதக் காவல் படையில் பணிபுரியும் மகளிர் பணியாளர்களுக்கு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேரப் பராமரிப்பு மைய வசதிகள் செயல்படுத்தப்படுகின்றன.
- பெண் பணியாளர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்களைத் தடுக்கவும், புகார்களை விரைந்து விசாரிக்கவும் அனைத்து மட்டங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஆண் பணியாளர்களுக்கு இணையாக பெண் பணியாளர்களுக்கு அவர்களின் முன்னேற்றத்தில் சம வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் இதனைத் தெரிவித்தார்.

– தி.பாமா






# பெண்களுக்கு இலவச பேருந்து வழங்கப்படுவது போல ஆண்களுக்கும் இலவச பேருந்து பயணத்திற்கு அனுமதிக்க வேண்டும்:

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்!

பொது போக்குவரத்தை ஊக்கப்படுத்த பெண்களுக்கு இலவச பேருந்து வழங்கப்படுவது போல, ஆண்களுக்கும் இலவசபேருந்து பயணத்திற்கு அனுமதிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் மற்றும் பாலின சமத்துவம் தொடர்பாக ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் பாமக கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் பசுமைத்தாயகம் அமைப்பின் தலைவர் சௌமியா அன்புமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அன்புமணி ராமதாஸ், “உலகம் முழுவதும் காலநிலை மாற்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இனி கடுமையான வறட்சி, கடுமையான வெள்ளம், கடுமையான புயல் என அடிக்கடி கேட்கும் மோசமான கால நிலையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம். நாம் சுதாரித்துக் கொள்ள வேண்டிய நேரம் இது” என்று தெரிவித்தார்

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், “கால நிலை மாற்றத்தினால் பெண்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. அதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதே நோக்கம். இளைஞர்கள் மத்தியில் இதைப் பற்றிய புரிதல் இல்லை, அவர்களுக்கு இதை கொண்டு செல்ல வேண்டும் என்பதே பிரதான நோக்கம். காலநிலை மாற்றம் வெள்ளம் மட்டுமல்ல, வறட்சி, பஞ்சம் போன்றவற்றையும் கொண்டு வரும். 2030க்குள் 50% புதுப்பிக்க வல்ல சக்தியை பயன்படுத்த தமிழக அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளனர். அதனை செயல்படுத்த வேண்டும்.

அரிசி 12 ரூபாய் விலை ஏற்றம் அடைந்துள்ளது, 3 மாதங்களுக்கு முன்பு குறுவைச் சாகுபடி கருகியதால் இன்று விலையேற்றம் அடைந்துள்ளது. அதற்குக் காரணம் கால நிலை மாற்றம் 75% சாலைகளை கார் ஓட்டுபவர்கள் பயன்படுத்துகிறார்கள். 3,500 அரசுப் பேருந்து உள்ளது. அதனை 8,000 பேருந்துகளாக அதிகரிக்க வேண்டும். இதனால் அதிக பொது மக்கள் பேருந்தைப் பயன்படுத்துவார்கள்,






மாசுபாடு குறையும். சென்னையில் பெண்களுக்கு இலவசப் பேருந்து போன்று அனைவருக்கும் இலவச பேருந்து சேவை கொண்டு வரவேண்டும். பின்னர் படிப்படியாக வாய்ப்புள்ள இடங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

அப்போதுதான் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகமாகும். மாசு பிரச்சனையால் சென்னையில் ஆண்டுக்கு 4,000 பேர் இறக்கும் சூழல் உள்ளது. இதனைத் தவிர்க்கத் தமிழக அரசு பல்வேறு புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சென்னையில் 870 பூங்காக்கள் உள்ளன. 95% பூங்காக்கள் சிறிய அளவிலான பூங்காவாக உள்ளது. சென்னையில் 100 ஏக்கர் பூங்காக்கள் 4 தொடங்க வேண்டும். ஏர்போட்டில் இருந்து கிளாம்பாக்கம் வரையிலான மெட்ரோ பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்" என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

– ராதிகா.S

# தூத்துக்குடி மீனவர்களை மீட்கும் பணியில் மாலத்தீவு கடற்படை: என்ன நடந்தது?

தருவைக்குளம் மரியான் தெருவைச் சேர்ந்தவர் மைக்கேல் ஜெயராஜ். இவர், கடந்த ஜனவரி 28ஆம் தேதி, இவருக்குச் சொந்தமான விசைப்படகில், அப்பகுதியைச் சேர்ந்த 10 மீனவர்களுடன் தருவைக்குளம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து, தங்கு கடல் மீன் பிடித்தொழிலுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.



இந்த படகினை தூத்துக்குடி சிலுவைப்பட்டியைச் சேர்ந்த செனிஸ்டன் என்பவர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்நிலையில், கடந்த பிப்ரவரி 3ஆம் தேதி கடலில் மீன் பிடித்துத் கொண்டிருந்த நிலையில், படகு இன்ஜினில் திடீரென பழுது ஏற்பட்டுள்ளது. இது குறித்த தகவலை, அவர்களுக்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள், தருவைக்குளம் மீன்பிடி துறைமுகத்திற்கு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, தருவைக்குளம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீனவர்களை தொடர்பு கொண்ட நிலையில், அவர்களுக்கு முறையான சிக்னல் வசதி கிடைக்காததால், அவர்களை தொடர்பு கொள்ள முடியாத நிலை இருந்துள்ளது.

இந்நிலையில், இன்ஜின் பழுதான படகு, தற்போது கேரளா மாநிலம் மினிகாய் தீவில் இருந்து சுமார் 500 கடல் மைல் தொலைவில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த பகுதி மாலத்தீவுக்குச் சொந்தமானது என்றும் கூறப்படுகிறது. இது தொடர்பாக இந்திய கடலோரக் காவல் படையினர், மாலத்தீவு கடலோரக் காவல்படைக்கு தகவல் தெரிவித்து, அவர்களை மீட்கும் பணி குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது, அவர்களை மீட்கும் பணியில் மாலத்தீவு கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

– இளைய தர்ஷினி

# 2024-2025 கல்வியாண்டு முதல் சென்னை ஐஐடியில் விளையாட்டு வீரர்களுக்கு 30 இடங்கள் ஒதுக்கீடு!

சென்னை ஐஐடியில் முதல் முறையாக இளங்கலை படிப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான மாணவர் சேர்க்கையில் 30 இடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சிறந்த விளையாட்டு வீரர்கள் சேர்க்கையை (Sports Excellence Admission – SEA) 2024-2025 கல்வியாண்டில் இருந்து அறிமுகப்படுத்த உள்ளது.

அதன்படி, இந்தியாவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒவ்வொரு இளங்கலைப் படிப்புகளிலும், மாணவிகளுக்கு 1 முதல் 2 இடங்கள் வரையிலும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் எனவும், இத்திட்டம் தகுதியான மாணவர்களை தங்களது விளையாட்டுகளில் தொடர்ந்து நீடிக்கச் செய்வதுடன், உயர் கல்வியைத் தொடரவும் ஊக்குவிக்கிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகளுக்காக, சென்னை ஐஐடி தனி இணைய முகப்பை உருவாக்கி, இது குறித்த அனைத்து விவரங்களுடன் கூடிய https://jeeadv.iitm.ac.in/sea/ என்ற இணையதளத்தினை சென்னை ஐஐடி இயக்குனர் காமகோடி 06.02.2024 அன்று துவக்கி வைத்தார்.

இது குறித்து சென்னை ஐஐடி இயக்குனர் பேராசிரியர் வி.காமகோடி ஈடிவி பாரத்திற்கு அளித்த பேட்டியில், “இளம் விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிப்பதுடன், அவர்கள் தங்களது விளையாட்டுகளை பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கண்ணோட்டத்துடன் புரிந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. சென்னை ஐஐடியில் விளையாட்டு தொடர்பான பல்வேறு விருப்பப் பாடங்களும், பல்வேறு அதிநவீன வசதிகளும் இடம் பெற்றுள்ளன.



எதிர்காலத்தில் மேம்பட்ட உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு வளாகம் ஒன்றைத் தொடங்கவிருக்கிறோம். இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் விளையாட்டில் சிறந்து விளங்குவோருக்கான மாணவர் சேர்க்கை தொடங்க இருக்கிறது. சென்னை ஐஐடியில் பயிலும் மாணவர்கள், உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களாக மாற வேண்டும் என விரும்புகிறோம்.

இந்த திட்டத்தின் மூலம், மாணவர் சேர்க்கைக்கு தகுதி பெற, விண்ணப்பதாரர்கள் 12ஆம் வகுப்பில் பொதுப் பிரிவினர் 75 சதவீதம் மதிப்பெண்களும், பிற பிரிவினர் 65 சதவீதம் மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். மேலும், ஜேஇஇ அட்வான்ஸ் பொதுத் தேர்வு தரவரிசைப் பட்டியல் (CRL) அல்லது பிரிவு வாரியான தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். இதுமட்டுமல்லாது, கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற தேசிய அல்லது சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒரு பதக்கத்தையாவது வென்றிருக்க வேண்டும்.

மேலும், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைச்சகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 13 விளையாட்டுகளைக்

கொண்ட பட்டியலில் விண்ணப்பதாரர்களின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச மற்றும் தேசிய அளவில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், தனி விளையாட்டு தரவரிசைப் பட்டியல் (SRL) தயாரிக்கப்படும். இந்த SRL பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மாணவர் சேர்க்கைக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்னை ஐஐடியில் உள்ள 15 பாடப் பிரிவுகளிலும் தலா 2 இடங்கள் என, 30 இடங்களில் மாணவர் சேர்க்கை நடத்தப்படும். சென்னை ஐஐடியில் பி.இ., பி.டெக். பட்டப் படிப்பிற்கான கட்டணம் வசூலிக்கப்படும். மேலும், ஆண்டு வருவாய் ரூ.5 லட்சத்திற்கு குறைவாக உள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கட்டணச் சலுகை அளிக்கப்படும்.

முதல் முறையாக அறிமுகம் செய்யப் பட்டுள்ளதால் குறைந்தளவில் மாணவர்கள் சேர்ந்தாலும், வரும் ஆண்டுகளில் அதிகளவில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் என்று நம்புகிறோம். மேலும், சென்னை ஐஐடியில் செயல்படுத்தப்பட்டு வரும் விளையாட்டு ஆய்வு மையத்தின் மூலம், மாணவர்களின் திறன்களை வளர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அனைத்து போட்டிகளிலும் டெக்னாலஜி துணை இல்லாமல் உலக சாம்பியன் ஆக முடியாது என்ற நிலை தற்போது ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக, செஸ் விளையாட்டில் இது நன்றாகத் தெரிகிறது. ஆகவே, விளையாட்டுத் துறைக்காக தனியாக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

– R.ஹரிகிருஷ்ணன்

# பாரத் அரிசி விற்பனை திட்டம் தொடக்கம்

அதிகரித்து வரும் அரிசியின் விலையை கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வரும் நிலையில் தற்போது புதிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

**மத்திய அரசின் நடவடிக்கை:**

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரிசியின் விலை அதிகரித்து வந்த நிலையில் விலைவாசியை கட்டுப்படுத்தும் வகையில் அரசு ஏற்றுமதிக்கு புதிய கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்தது. இதனால் அரிசியின் விலை உள்நாட்டில் 2கட்டுக்குள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் கடந்த மாதங்களில் அரிசியின் விளைச்சல் உற்பத்தி பாதிப்பு மற்றும் தேவை அதிகரிப்பின் காரணமாக தொடர்ந்து அரிசியின் விலை ஆனது உயர்ந்து வருகிறது. இதனால் பாதிக்கப்படும் சாமானிய மக்களுக்கு உதவும் வகையில் மத்திய அரசு பாரத் அரிசி என்ற மானிய விலை அரசு திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.




இந்த திட்டத்தில் ஒரு கிலோ அரிசி ரூபாய் 29 க்கு மத்திய அரசின் தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு, தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு மற்றும் மத்திய அரசின் விற்பனை மையங்கள் மூலமாக சில்லறை சந்தையில் விற்பனை செய்யப்படும். இத்திட்டத்தின் தொடக்கத்திற்காக முதல் கட்டத்தில் 5 லட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. 5 கிலோ மற்றும் 10 கிலோ பைகளில் கிடைக்கும் பாரத் அரிசி இணையவழி விற்பனை மூலமாகவும் சந்தைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

– அன்பு மணி,




தமிழக வெற்றி கழகம் என்னும் புதிய கட்சியைத் தொடங்கி அதன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார் நடிகர் விஜய். மிக விரைவில் முழுநேர அரசியலிலும் ஈடுபட உள்ளதாக அறிவித்துள்ளார். இந்நிலையில் தனது அறிக்கை மூலம் கட்சியின் பெயர், நோக்கம் மற்றும் கொள்கைகளை அறிவித்துள்ள விஜய்தான் இந்திய ட்ரெண்டிங்கில் முதலிடம்.

இதற்கு முன்பே விஜயகாந்த், கமலஹாசன் என திரைத்துறையின் சமகால உச்சங்களும் இதேபோன்ற கொள்கைகளை முன்வைத்து தமிழ்நாட்டில் புதிய கட்சிகளைத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், அவர்களில் இருந்து விஜய் எங்கு வேறுபடுகிறார்? அவரது புதிய கட்சியின் மூலம் என்ன மாதிரியான அரசியல் மாற்றங்களை தமிழ்நாட்டில் கொண்டு வர நினைக்கிறார்?

**நடிகர் விஜயின் புதிய கட்சி**

நடிகர் விஜய் 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலைக் குறிவைத்து புதிய கட்சியைத் தொடங்கியதோடு, அதுகுறித்த தனது அறிக்கையில் நடப்பு அரசியலை விமர்சித்துள்ளார். அதில் "ஊழல் மலிந்த அரசியல் கலாசாரமும், மதம் சார்ந்த பிளவு அரசியலும் நமது முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது," எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், தமிழக மக்கள் "ஒரு தன்னலமற்ற, வெளிப்படையான, சாதி மத பேதமற்ற, தொலைநோக்கு சிந்தனை உடைய, லஞ்ச - ஊழலற்ற திறமையான நிர்வாகத்திற்கு வழிவகுக்ககூடிய அடிப்படை அரசியல் மாற்றத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை," என்றும் தெரிவித்துள்ளார். அதில் எந்தக் கட்சியின் பெயர்களையும் குறிப்பிட்டு விஜய் விமர்சனம் செய்யவில்லை என்றாலும், "மதத்தை வைத்து அரசியல் செய்யும் பாஜகவையும், ஊழல் அரசியல் செய்யும் திமுக மற்றும் அதிமுகவையும் எதிர்த்து மாற்று அரசியலைக் கொண்டு வருவதே தமிழக வெற்றி கழகத்தின் நோக்கம்" என்று கூறுகிறார் அக்கட்சியைச் சேர்ந்த லயோலா மணி.

ஆனால், விஜய் ஒரு டெம்ப்ளேட்டிவ் (Template) அரசியல்வாதியாக உருவெடுத்திருக்கிறாரே தவிர, ஒரு மாற்று அரசியலை முன்வைக்கவில்லை என்று கூறுகிறார் வலைப்பேச்சு அந்தணன்.

**விஜய் என்ன மாற்றம் தரப் போகிறார்?**

தமிழ்நாட்டில் ஒரு அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் காத்திருப்பதாகவும், அதற்காக மக்கள் சக்தியுடன் இணைந்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரப் போவதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் நடிகர் விஜய்.

இதுவரை தனது மக்கள் இயக்கத்தின் மூலம் செய்த சமூக சேவைகளைப் பட்டியலிட்டு, இனி அரசியல் ரீதியாகவும் தொண்டாற்றவே புதிய கட்சியைத் தொடங்குகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அந்தணன் அவர்களிடம் கேட்கும்போது, "ஒருவர் அரசியலுக்கு வரும்போது



# மாற்றம்!

## ...ற்றி கழகம்

## ...றம் சாத்தியமா?

அதற்கான திறனோடு வருகிறாரா, இல்லையா என்று ஆரம்ப நிலையிலேயே தெரிந்து விடும். ஆனால், அப்படி எந்தத் திறனும் விஜயிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் இதுவரை அறிவித்த திட்டங்கள் அனைத்துமே பம்மாத்து திட்டங்கள் மட்டுமே,'' என்று கூறுகிறார்.

அதற்கு உதாரணமாக விஜய் தொடங்கிய இரவுப் பாடசாலை திட்டத்தைக் குறிப்பிடும் அவர், அது உண்மையில் யாருக்குத் தேவையோ அவர்களைச் சென்றடையவில்லை என்றும், ஓர் அறிவிப்பை விடுத்துவிட்டு அதற்காக பயனே இல்லாத வேலையைச் செய்து அதை முடித்து விடுவதே இவர்கள் பாணியாக இருக்கிறது என்கிறார்.

மேலும் விஜயகாந்திடம்கூட வீட்டிற்கே வந்து ரேஷன் வழங்கப்படும் போன்ற சில நல்ல திட்டங்கள் இருந்தன. ஆனால் விஜயிடம் அப்படி எந்த மக்கள் நலத் திட்டமும் இல்லை. எனவே இவர்களிடம் ஒரு மாற்றத்திற்கான அரசியலை நம்மால் எதிர்பார்க்க முடியாது என்கிறார் அந்தணன்.

**என்ன மாற்றம் கொண்டு வரப் போகிறார்கள்?**

மாற்றம் கொண்டு வருகிறேன் என்று சொல்லாமல் யாராலும் அரசியலுக்குள் வர முடியாது. ஆனால் அது என்ன மாதிரியான மாற்றம் என்பதுதான் முக்கியம், அது வெற்றுக் கோஷமா அல்லது உண்மையான கொள்கையா என்பதும் முக்கியம் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன்.

இதற்கு உதாரணம் கூறும் அவர், "கல்வித் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட முன்னிலையில் இருக்கிறது. இந்த நிலைக்கு தமிழ்நாடு எப்படி உயர்ந்தது? இந்தப் பார்வை உங்களுக்கு இருக்க வேண்டுமல்லவா?''

"அந்தப் பார்வை இல்லாமல் நீங்கள் என்ன மாற்றம், எதில் கொண்டு வர போகிறீர்கள். கல்வியிலா? தொழில்துறையிலா? மக்கள்நல கட்டமைப்பிலா?'' என்ற கேள்வியை முன்வைக்கிறார்.

மேலும், மாற்றம் என்றால் தமிழ்நாட்டிற்கா? அல்லது தேசிய அரசியலுக்கா? அப்படியென்றால் இன்று இந்தியாவிற்கான பெரிய சவால் என்பது அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தல். அதில் உங்களுடைய நிலைப்பாடு என்ன? அதை நீங்கள் சொல்லவில்லை என்பதே உங்களிடம் தெளிவில்லை என்பதற்கான அர்த்தம் என விமர்சிக்கிறார்.

எனவே இவர்களது அறிக்கையில் மாற்றம் என்பது வெறுமையானதாக இருக்கிறது என்கிறார் அவர்.

மேலும் பேசிய அவர், "மாநில உரிமை குறித்த விவாதம் 1947ஆம் ஆண்டிலிருந்து எழும் குரல். இதில் நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? இதர அரசியல் சூழல், மக்கள் நலன் சார்ந்து என்ன கொள்கைகளைக் கொண்டுள்ளீர்கள்? தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் கொள்கை முடிவுகள் என்ன என்ற தெளிவே இவர்களிடத்தில் இல்லை,'' என்கிறார்.

ஆனால், புதிதாகத் தொடங்கியுள்ள கட்சி மீது இவ்வளவு அழுத்தம் போட முடியுமா என்று கேட்கும்போது, "ஆரம்பிக்கும் போதுதான் போட

முடியும். ஆரம்பிக்கும்போதே தெளிவு இல்லை என்றால் அது கடைசி வரை வரவே வராது'' என்கிறார் பன்னீர்செல்வன்.

#### விஜய் ஆதரவாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

தமிழக வெற்றி கழகம் கட்சியின் நிர்வாகிகள் யார் என்ற விவரங்கள், கட்சியின் கொள்கை, கோட்பாடுகள் சார்ந்த விவரங்கள் இன்னும் வெளி யிடப்படவில்லை.

ஆனால், 25.01.2024 நடைபெற்ற மாநில பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டத்தில், கட்சியின் தலைவர் மற்றும் தலைமை செயலக நிர்வாகிகள் தேர்தெடுக்கப்பட்டு கட்சியின் அரசமைப்பு சட்டம் மற்றும் சட்ட விதிகளுக்கு (bylaws) முறைப்படி ஒப்புதல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார் விஜய்.

இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு பெரிய மாநாடு நடத்தி கட்சியின் கொள்கை, கொடி, எதிர்கால மக்கள் நலத் திட்டங்கள் உள்ளிட்டவை அறிவிக்கப்படும் என்றார் லயோலா மணி.

#### 'கட்சியே மாற்றம் தான்'

விஜய் என்ன மாற்றங்களை உருவாக்கப் போகிறார் என்ற கேள்வியை முன்வைத்தபோது, ''ஊழல் மற்றும் பிளவுவாத சக்திகளுக்கு எதிராக தளபதி விஜய் இந்தக் கட்சியைத் தொடங்கியதே அடுத்த தலைமுறைக்கான முதல் மாற்றம்,'' என்று கூறுகிறார் லயோலா மணி.

மேலும் பேசிய அவர், ''ஏற்கெனவே கட்சியின் தலைவர் தளபதி விஜய், எங்களுடைய சித்தாந்தம் பெரியாரிய சமூகநீதி அரசியல், அம்பேத்கரிய சமத்துவ அரசியல், திராவிட, தமிழ்த்தேசிய கோட்பாடுகளை உள்ளடக்கிய அரசியலே என அறி வித்துவிட்டார்,'' என்கிறார்.

மேலும் இத்தனை ஆண்டுகளாக சமூகநீதி என்ற பெயரில் மாற்றம் எதையும் கொண்டு வராமல் குடும்ப அரசியல் செய்யும் திமுக, மதவாத அரசியல் செய்யும் பாஜகவை எதிர்த்து 2026 சட்டமன்ற தேர்தலில் ஒருவிரல் புரட்சி செய்வதே தங்களின் தற்போதைய இலக்கு என்றும் அவர் கூறியுள்ளார்.

இதில் விஜயுடன் இருக்கும் தொண்டர்கள் மற்றும் தம்பி, தங்கைகள் அனைவருமே விளிம்பு நிலையைச் சேர்ந்தவர்கள் என்பதும் அரசியல் மாற்றத்திற்கான அடுத்தபடி என்கிறார் மணி.

#### மாற்றங்களைச் சாத்தியப்படுத்துவாரா விஜய்?

ஒரு கட்சியின் இலக்குகளைச் சாத்தியப்படுத்த அதன் அடுக்குகள் மிக அவசியமானவை. அந்த வகையில் தனது மக்கள் இயக்கத்தை நம்பி களத்தில் இறங்கியிருக்கும் நடிகர் விஜய்தான் நினைக்கும் மாற்றங்களை எப்படி சாத்தியப்படுத்துவார் என்ற கேள்விகள் அரசியல் களத்தில் எழுந்துள்ளது.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அந்தணன், ''அறிவார்ந்த தலைவர்கள் யாருமே தமிழக வெற்றிக் கழகத்தில் கிடையாது. அதிலும் புஸ்ஸி ஆனந்தெல்லாம் ஒரு கோமாளி போலத்தான் இருக்கிறார். அவரையெல்லாம் ஒரு அரசியல் தலைவர் என்றே சொல்ல முடியாது,'' என்கிறார்.

மேலும் பேசிய அவர், ''ஆனாலும் அவரது தொண்டர் படைகளை வைத்துக் கொண்டு நிச்சயம் அரசியல் களத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவார். காரணம் அவர் ரஜினியைப் போலன்றி, சரியான நேரத்தில் அரசியலுக்கு வந்துள்ளார்.

அவரது வருகை அனைத்து கட்சி மீதும் தாக்கம் செலுத்தும். தமிழ்நாடு அரசியலை சற்று உலுக்கும். ஆனால் இந்தக் கட்டமைப்பை வைத்துக் கொண்டு வெற்றியெல்லாம் பெற முடியாது,'' என்கிறார்.

தமிழ்நாட்டில் திமுக, அதிமுக இல்லாமல் 12% வாக்கு வங்கி உள்ளது. அதைக் குறிவைத்துதான் மூப்பனார், வைகோ, விஜயகாந்த் எனப் பலரின் அரசியல் பயணித்துள்ளது. அதை நோக்கித்தான் விஜயும் கட்சி தொடங்கியுள்ளார் என்கிறார் பன்னீர்செல்வன்.

மேலும் ஒரு படிமேலே சென்று, ''தற்போது இந்தியா கூட்டணிக்கு எதிராக வாக்குகளைச் சிதறடிப்பதற்கான ஒன்றிய அரசின் முயற்சியாகவே விஜய் களமிறக்கப் பட்டுள்ளாரோ என சந்தேகிக்கத் தோன்றுகிறது,'' என்றும் அவர் கூறுகிறார்.

அதற்குக் காரணமாக ''நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை என்றால் எதற்காக இப்போதே கட்சி தொடங்க வேண்டும்?'' என்ற கேள்வியை முன்வைக்கிறார். ''இவர்கள் கட்சி தொடங்கிய நேரமே சந்தேகத்தைக் கிளப்புகிறது.''

''ஆம் ஆத்மியின் ஊழல் நிலைப்பாடு, இடதுசாரிகளின் மதவாத எதிர்ப்பு, திமுகவின் மாநில உரிமை கொள்கை என எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொள்வீர்கள் என்றால் நீங்கள் ஒரு கட்சிக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த அரசியல் ஸ்பெக்ட்ரமுக்குமே 'பி' டீம்'' என்று காட்டமாகக் கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன்.

இந்த விமர்சனத்திற்குப் பதிலளித்து பேசிய லயோலா மணி, ''இவர்கள் திமுகவிற்கு எதிராக யாராவது பேசினாலே பாஜகவின் 'பி' டீம் எனச் சொல்லி விடுகிறார்கள். ஆனால், உண்மையில் திமுகதான் பாஜகவின் 'பி' டீம். சந்தர்ப்பவாத அரசியல் செய்யும் கட்சி,'' என்று தெரிவித்தார்.

**– பா.கார்த்திகேயன்**



வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.

# தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளராக சஞ்சய் ஜாஜு பொறுப்பேற்றார்



மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளராக சஞ்சய் ஜாஜு 05.02.2024 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் தெலங்கானாவைச் சேர்ந்த 1992 தொகுப்பு ஐஏஎஸ் அதிகாரி ஆவார். அவர் பதவியேற்றதைத் தொடர்ந்து, அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் அபூர்வ சந்திரா, பிற அதிகாரிகள் மற்றும் பல்வேறு ஊடகப் பிரிவுகளின் பிரதிநிதிகள் அவரை வரவேற்றனர்.

முன்னதாக, ஜாஜு 2018 முதல் 2023 வரை மத்திய அரசின் கூடுதல் செயலாளராகவும், அக்டோபர் 2014 முதல் மார்ச் 2018 வரை தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

மே 2011 முதல் அக்டோபர் 2014 வரை ஆந்திர மாநில அரசின் (மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்புத் துறை) செயலாளராகப் பணியாற்றினார்.

– ப.தனசேகர்

# தமிழ்நாட்டின் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு மத்திய நிதியுதவியுடன் ரூ. 3354.80 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாட்டின் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு 2014-ம் ஆண்டு முதல் 2024 ஜனவரி 31 வரை தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள தீனதயாள் அந்தியோதயா திட்டத்தின் படி, மத்திய அரசின் நிதியுதவி ரூ.1835.95 கோடியுடன் ரூ.3354.80 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் உறுப்பினர் கே.சண்முகசுந்தரம், விஷ்ணு தயாள் ராம் ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய கிராமத்துறை இணையமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் 37 மாவட்டங்களில் 3,36,044 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 40,02,881 பேர் இடம் பெற்றுள்ளனர்.

2014-15 முதல் 2024 ஜனவரி 31-ம் தேதி வரை தமிழ்நாட்டில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு மத்திய அரசு ரூ.1871.65 கோடி ஒதுக்கியது. அதில் ரூ.1835.95 கோடி நிதி தமிழ்நாட்டுக்கு விடுவிக்கப்பட்டது. அதில் மாநில அரசு பங்கும் சேர்ந்து ரூ.3354.80 கோடி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

– பி.ஸ்டாலின்

# எவ்வளவு நிதி வழங்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பது நான் அல்ல, நிதி குழுதான்:

## மக்களவையில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில்

மக்களவையில் 05.02.2024 அன்று நிகழ்வின்போது பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு நிதி பகிர்வில் ஓரவஞ்சனை காட்டப்படுவதாக காங்கிரஸ் மக்களவை குழுத் தலைவர் ஆதிரஞ்சன் சவுத்ரி குற்றம் சாட்டினார்.

இதற்கு பதில் அளித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

“ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு நிதி வழங்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பது நான் அல்ல; நிதிக்குழுதான். நிதிக்குழுவும் தாங்களாகவே பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய நிதி குறித்து முடிவு செய்வதில்லை. அனைத்து மாநிலங்களுக்கும் நிதிக்குழு அதிகாரிகள் நேரில் சென்று கலந்து ஆலோசனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

“நிதிக்குழு பரிந்துரைப்பதைதான் நான் பின்பற்றுகிறேன். நிதிக்குழுவின் பரிந்துரையைதான் ஒவ்வொரு நிதி அமைச்சரும் பின்பற்றுகிறார்கள். பிடித்த மாநிலம், பிடிக்காத மாநிலத்திற்கு ஏற்றார்போல நிதியை மாற்றுவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை. மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் எவ்வித பாகுபாடும் காட்டவில்லை,” என்று திருமதி நிர்மலா பேசினார்.



அதனை தொடர்ந்து 2024-25ம் ஆண்டிற்கான ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் மதிப்பிடப்பட்ட வரவுகள் மற்றும் செலவினங்களின் அறிக்கையை மக்களவையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். மேலும் 2023-24ம் ஆண்டிற்கான மானியங்களுக்கான துணை கோரிக்கைகள், இரண்டாம் தொகுதியைக் காட்டும் அறிக்கையை வழங்கினார்.

– வீ.அய்யனார்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |


Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**

UPI Number:
9962245338

# குடியுரிமை திருத்தச் சட்டம் அமல் எப்போது?

## அமித் ஷா தகவல்!



பார்லிமென்டில் நிறைவேற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்தும், நடைமுறைக்கு வராத சி.ஏ.ஏ., எனப்படும் குடியுரிமை திருத்த சட்டம், விரைவில் அமலுக்கு வந்துவிடும் என மத்திய இணை அமைச்சர் சாந்தனு தாக்குர் தெரிவித்துள்ளார். லோக்சபா தேர்தல் அறிவிப்பு எந்த நேரத்திலும் வரலாம் என்ற சூழலில், இந்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவோம் என்று மத்திய உள்துறை அமைச்சர்அமித் ஷா கூறினார்.

டெல்லியில் பிரபல ஆங்கில ஊடகம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாகலந்துகொண்டார். அப்போதுஅவர் பேசியதாவது:

வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக தனித்து 370 இடங்களிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) 400 இடங்களிலும் வெற்றி பெறும். பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக மத்தியில் ஆட்சி அமைப்பார்.

மக்களவைத் தேர்தல் முடிவு குறித்து எங்களுக்கு எந்தவித ஆச்சரியமும் இல்லை. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூட பாஜகதலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிதான் மீண்டும் வெற்றிபெறும் என்பதை தெரிந்துகொண் டுள்ளனர். ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கியஅரசியலமைப்புச் சட்டத்தின் 370-வது பிரிவை நாங்கள் ரத்து செய்தோம். வரும் மக்களவைத் தேர்தலில் நாட்டு மக்கள் பாஜகவுக்கு தேவையான ஆசிகளை வழங்குவார்கள். பாஜகவுக்கு 370 இடங்களையும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 400 இடங்களுக்கும் மேல் வழங்கி அவர்கள் ஆசி கொடுப்பார்கள் என நம்புகிறோம்.

2024 மக்களவைத் தேர்தல் என்பது பாஜக மற்றும் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கு இடையேயான மோதல் இல்லை. இது வளர்ச்சி மற்றும் வெற்று கோஷங்களைக் கொடுப்பவர்களுக்கு இடையிலான தேர்தலாக இருக்கும்.

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளில் இருந்து, அகதிகளாக நம் நாட்டில் குடியேறிய ஹிந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள், சமணர்கள் உள்ளிட்டோருக்கு குடியுரிமை வழங்க மோடி அரசு முடிவு செய்தது.

இதற்காக குடியுரிமை திருத்த மசோதா கொண்டு வந்தது. அது, 2019ல் பார்லிமென்டின் இரு சபைகளிலும் நிறைவேறியது. ஜனாதிபதியும் உடனடியாக ஒப்புதல் அளித்ததால், சட்டம் ஆனது மசோதா. ஆனால், இதுவரை அந்த சட்டம் நடைமுறைக்கு வரவில்லை.

பார்லிமென்டில் சட்டம் நிறைவேற்றப்பட்டால், அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அந்த சட்டத்திற்கான விதிகள் வகுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், லோக்சபா மற்றும் ராஜ்யசபா குழுவிடம் இருந்து ஆறு மாதத்துக்கு ஒருமுறை கால நீட்டிப்பு பெற வேண்டும். அந்த வேலையை உள்துறை அமைச்சகம் தவறாமல் செய்து வருகிறது.

கால தாமதத்துக்கு முக்கிய காரணம், நாட்டின் பல பகுதிகளில் இந்த சட்டத்துக்கு எதிராக நடந்த போராட்டம். 'அண்டை நாடுகளில் கொடுமைகளுக்கு பயந்து இந்தியாவுக்கு அகதிகளாக வரும் அனைவருக்கும் குடியுரிமை அளிப்பதே நியாயம்.

'அதை விடுத்து, முஸ்லிம்களை தவிர்த்து மற்ற மதத்தினருக்கு குடியுரிமை வழங்க சட்டம் வழி செய்கிறது; இந்த பாரபட்சத்தை ஏற்க முடியாது' என எதிர்க்கட்சிகளும், முஸ்லிம் அமைப்புகளும் கூறின.

'சட்டத்தில் குறிப்பிட்டுள்ள மூன்றுமே முஸ்லிம் நாடுகள். அங்கே மற்ற மதத்தினர் தான்




சிறுபான்மை. அவர்கள் தான் கொடுமைக்கு ஆளாகி இந்தியாவுக்குள் தஞ்சம் வருவரே தவிர, முஸ்லிம்களுக்கு அந்த பிரச்னை இல்லை. ஆகவே, அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் அவசியமே எழவில்லை' என அரசு பதில் சொன்னது.

என்றாலும் எதிர்க்கட்சிகள் திருப்தி அடையவில்லை. குறிப்பாக மேற்கு வங்க முதல்வர் மம்தா இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறார். வங்கதேசத்தில் இருந்து ஏராளமான முஸ்லிம்கள் மேற்கு வங்கத்தில் ஊடுருவி நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

வழக்கமாக அவர்கள் திரிணமுல் காங்கிரஸ் கட்சிக்கே ஓட்டளிக்கின்றனர். எனவே, மம்தா இதை இழப்பாக பார்க்கிறார். இந்த சட்டத்தின் ஆங்கில பெயரில் உள்ள முதல் வார்த்தைகளை சேர்த்தால் சி.ஏ.ஏ., என வருகிறது. அதை குறிப்பிட்டு, "தேர்தலுக்காக மத்திய அரசு கா கா என கூவுகிறது," என்றார் மம்தா.

ஆனால், 'குடியுரிமை சட்டம் நடைமுறைக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது' என, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சமீபத்தில் தெரிவித்தார். சட்டம் அமலுக்கு வரப்போகும் தகவலை மத்திய இணை அமைச்சர் சாந்தனு தாக்குர் நேற்று தெரிவித்தார்.

இவர், மேற்கு வங்கத்தின் வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்; மத்துவா என்ற பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர். இந்த சமூகத்தினர், மேற்கு வங்கத்தில் கணிசமாக உள்ளனர். இவர்கள், 1950 முதல் மேற்கு வங்கத்தில் குடியேறியவர்கள்.

திரிணமுல் நிர்வாகி குணால் கோஷ், ''மேற்கு வங்கத்தில் குடியுரிமை திருத்த சட்டம் அமலுக்கு வராது என்பதை முதல்வர் மம்தா ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டார். ''லோக்சபா தேர்தலுக்கு முன் பொய்யான வாக்குறுதிகளை அளித்து, தேர்தலில் வெற்றி பெற பா.ஜ., முயற்சிக்கிறது,'' என்றார்.

– ம.திலிப் குமார்

# தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி வட்டி 8.25% ஆக அதிகரிப்பு;

## 3 ஆண்டுகளில் அதிகபட்ச உயர்வு!




இபிஎஃப்ஓ (EPFO) எனப்படும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் 8.15 சதவீதத்தில் இருந்து 8.25 சதவீதமாக உயர்த்தப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

தொழிலாளர்களின் ஓய்வூதிய நிதி அமைப்பான EPFO சனிக்கிழமையன்று 2023-24ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) டெபாசிட்டுகள் மீதான வட்டியை 8.25 சதவிகிதமாக உயர்த்தியது. இது மூன்று ஆண்டுகளில் உயர்ந்தபட்ச வட்டிவிகிதம் ஆகுமன்.

மார்ச் 2023 இல், 2021-22 இல் 8.10 சதவீதமாக இருந்த பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி மீதான வட்டி 2022-23 இல் 8.15 சதவீதமாக உயர்த்தப்பட்டது. முன்னதாக மார்ச் 2022 இல், 2021-22க்கான வட்டியை 2020-21 இல் 8.5 சதவீதத்திலிருந்து 8.1 சதவீதமாகக் குறைத்தது. இது நாற்பது ஆண்டுகளில் மிகக் குறைந்தபட்ச வட்டி ஆகும்.

அதற்கு முன் 1977-78ல் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி வட்டி விகிதம் 8 சதவீதமாக இருந்தது தான் இது மிகக் குறைந்த அளவு ஆகும்.

2020-21 ஆம் ஆண்டிற்கான EPF டெபாசிட்டுகளுக்கான 8.5 சதவீத வட்டி விகிதம் மார்ச் 2021 இல் இபிஎஃப்ஓ குறித்து முடிவெடுக்கும் அமைப்பான மத்திய அறங்காவலர் வாரியத்தால் முடிவு செய்யப்பட்டது.

மத்திய அறங்காவலர் வாரியம் (CBT) எடுத்த முடிவு நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். நிதி அமைச்சக ஒப்புதல் பெற்ற பிறகு, 2023-24க்கான வட்டி விகிதம் நடைமுறைக்கு வரும். இதன் மூலம் ஆறு கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

– பா.அசோக்குமார்



# இந்தியா மியான்மர் இடையிலான எளிமையான போக்குவரத்து முறைகளை முடிவிற்கு கொண்டு வந்தது இந்தியா

மணிப்பூரில் இந்திய - மியான்மர் எல்லை பகுதியில் வேலி அமைப்பதற்கு மணிப்பூர் பழங்குடியினர் அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

நம் அண்டை நாடான மியான்மரில் ராணுவ ஆட்சி நடக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு பிரிவினர் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பாதிக்கப்படும் பொதுமக்கள் மற்றும் மியான்மர் ராணுவத்தினர் இந்திய எல்லைக்குள் ஊடுருவி வருவது தொடர்கதையாக உள்ளது.


நம் நாட்டின் அருணாசல பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மிசோரம் ஆகிய நான்கு மாநிலங்கள் மியான்மருடன், 1,643 கி.மீ., எல்லையை பகிர்கின்றன.

சமீபத்தில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்திய - மியான்மர் எல்லையில், இந்திய - வங்கதேச எல்லையைப் போன்று முள்கம்பி தடுப்பு வேலிகள் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார். இந்த பணி, எல்லை சாலைகள் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மணிப்பூரின் மோரே பகுதியில், 10 கி.மீ., எல்லையில் முள்வேலி கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மேலும் முள்வேலி கம்பிகள் அமைக்க மணிப்பூரின் சுராசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள பழங்குடியின அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து அங்குள்ள பூர்விக பழங்குடியினர் தலைவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இதன் முடிவில், இந்திய - மியான்மர் எல்லையில் வேலி அமைக்கும் பணிக்கு எதிர்ப்பு தெரிவிப்பது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது இருநாட்டு பழங்குடியினர் இடையிலான சுதந்திரமான நடமாட்டத்தை தடுக்கும் என கூறிய அவர்கள், மியான்மர் அதிகாரிகளுடனும் இதுகுறித்து பேச உள்ளதாக தெரிவித்தனர்.

**– வீ.சந்தோஷ்குமார்**


Subzero Cool Tech
AC REPAIR SERVICE & RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY PREMIUM SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil, Mettukuppam,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com





**PENA KURAL,** Tamil Monthly, February 2024
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**